JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 31-2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW7 | Prosecution /Defence / Court | |
| Name | Arjunan | Caste | |
| Father's Name | Chinna Sengodan | Calling | |
| Village | Bhavani Road, Karumandisellipalayam | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of
Date: 12.10.2021

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்துகொண்டு பந்தல் கடை வைத்துள்ளேன். அ.சா.1-பூங்கொடியை எனக்கு தெரியும். சுமார் 5 வருடத்திற்கு முன்பு அவரது வீட்டில் திருட்டு போனதாக கேள்விப்பட்டேன். மேற்படி திருட்டில் ஈடுபட்ட கொள்ளையர்களை காவல்நிலையத்தில் பிடித்து வைத்திருந்ததாக கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் நானும் பிரபுவும் அங்கு சென்றோம். அங்கு அவரின் தோடை கைப்பற்றி அது அவருடையதா என்று கேட்டு விசாரித்து என்னிடம் சாட்சி கையெழுத்து பெற்றனர். வேறு எதுவும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிரி இம்ரானின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த **கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.4**. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.5**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி அ.சா.7 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

கடந்த 19.12.2014 ஆம் தேதி போலீசார் தன்னை விசாரித்ததாகவும் அந்த விசாரணையில் 20.11.2014 ஆம் தேதி மாலை 3.30 மணிக்கு அ.சா.1 வீட்டில் திருட்டு போனதாகவும் அதை நான் கேள்விப்பட்டு நானும் பிரபுவும் பெருந்துறை காவல்நிலையத்திற்கு சென்றதாகவும் அங்கு ஆஜர் எதிரி இம்ரான் காவல் நிலையத்தில் பிடித்து வைத்திருப்பதாகவும் அவரை காவல்ஆய்வாளர் விசாரணை செய்து இம்ரான் தானாக முன் வந்து எவ்வித தூண்டுதலும் இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் எங்கள் இருவர் முன்னிலையில் பதிவு செய்ததாகவும் அதனடிப்படையில் விஜயமங்கலம் பழைய இரும்பு வியாபாரி சிங்கராஜ் என்பவரிடம் அ.சா.1 வீட்டில் திருடிய தங்கமோதிரம் 2 ஜோடி கம்மல் ஆகியவற்றை அடகு வைத்திருப்பதாகவும் தாங்கள் என்னை கூட்டிப்போனால் அடகு வைத்த கடையை அடையாளம் காட்டுவதாக கூறியதன்பேரில் இம்ரானுடன் நானும் பிரபுவும் காவல் ஆய்வாளரும் பழைய இரும்பு வியாபாரி சிங்கராஜ் கடைக்கு சென்றும் அங்கு சிங்கராஜ் எடுத்து ஆஜர் செய்த 4.040 எடையுள்ள தங்கமோதிரம், சுமார் 5.350 கிராம் எடையுள்ள வெள்ளை பச்சை கல் வைத்த தங்கதோடு -2 ஜோடியும் எடுத்து எங்கள் முன்னிலையில் ஆஜர் செய்ததை காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார் என்னும் அதில் நாங்கள் இருவரும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்று கூறிவிட்டு தற்பொழுது எதிரி இம்ரான் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்பொழுது உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, 3சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the-----day of --------------2021.

Signature of Interpreter